**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 24.02.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 15 (LW3)

2025ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பால்பழனி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர் )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் சாத்தான்குளம் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து சலவைத்தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன காளிமுத்து எனது அக்கா கணவர் ஆவார். புகார்தாரர் ராணி எனது உடன்பிறந்த அக்கா. சாட்சி அனிதா எனது அக்கா மகள் ஆவார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு, இருட்டுரணியில் எனது அக்காவின் மாமியார் இறந்துவிட்டார். அதற்கு துக்கம் விசாரிப்பதற்காக நான் சென்றிருந்தேன். துக்கம் விசாரித்துவிட்டு நான் எனது வீட்டிற்கு

வந்துவிட்டேன். மறுநாள் காலை எனது அக்கா எனக்கு போன் செய்து, தனது கணவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். எவ்வாறு இறந்தார் என்று எனது அக்கா என்னிடம் சொல்லவில்லை. நான் எனது அக்கா கணவர் தவறி விழுந்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார். அவரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தை அவர் பதிவு செய்தார். அவ்வாறு பதிவு செய்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் 164 வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த 164 வாக்குமூலம் அ.த.சா.ஆ.15 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை உச்சிப்புளி போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அப்போது கடந்த 04.04.2023ம் தேதியன்று எனது அக்கா ராணியின் மாமியார் பேச்சியம்மாள் உடல்நலக்குறைவு காரணமாக இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு இறந்தவருக்கு 16வது நாள் சாமி கும்பிட வேண்டி, நானும் எனது சொந்தக்காரர்களும் இருட்டூரணி கிராமத்திற்கு வந்தோம் என்றால் சரிதான். அப்போது எனது கணவர் காளிமுத்து அதிகமான மதுபோதையில், எனது அக்காவையும், என்னையும், அங்கு வந்திருந்தவர்களையும் அசிங்கமாக பேசி பிரச்சனை செய்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர் தொடர்ந்து பிரச்சனை செய்து வந்ததால், வந்திருந்தவர்கள் பாதியில் கிளம்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல, சாப்பிட்டுவிட்டுதான் சென்றார்கள். தொடர்ந்து காளிமுத்து பிரச்சனை

செய்ததால், என் மனைவி மற்றும் எனது அக்கா ராணி ஆகியோர் ராணியின் வீட்டினுள் சென்று படுத்துவிட்டார்கள் என்றும், நான் மட்டும் எனது அக்கா வீட்டிற்கு வெளியில் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான்.

அப்போது நான், எனது மனைவியின் தங்கைக்கும், ஆஜர் எதிரிக்கும் போன் செய்து, காளிமுத்து குடிபோதையில் பிரச்சனை செய்துவருகிறார் என்றும், அவரை வந்து கண்டித்து வையுங்கள் என அழைத்தேன் என்றால் சரியல்ல. பின்னர் 19.04.2023ம் தேதி இரவு 01.00 மணிக்கு TN 65 AF 7573 என்ற யமஹா ஸ்கூட்டியில் ஆஜர் எதிரியும், அனிதாவும் இருட்டுரணி கிராமத்திற்கு வந்தார்கள் என்றும், அவர்களையும் மேற்படி காளிமுத்து தவறாக பேசி பிரச்சனை செய்தார் என்றும், அவரை சத்தம் போடாமல் இருக்கும் பொருட்டு ஆஜர் எதிரி கீழே கிடந்த சவுக்கு கட்டையை எடுத்து மேற்படி காளிமுத்துவின் உச்சந்தலையில் இரண்டு முறை ஓங்கி அடித்தார் என்றும், அவர் கீழே விழுந்துவிட்டார் என்றும், பிறகு ஆஜர் எதிரியும், அனிதாவும் அதே இருசக்கர வாகனத்தில் அவர்களது ஊருக்கு சென்றுவிட்டார்கள் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

பின்னர் இரவு 01.15 மணிக்கு வீட்டிலிருந்து வெளியே வந்த எனது அக்கா ராணி, காளிமுத்துவின் தலையில் இரத்தக்காயம் இருந்ததை பார்த்து, மஞ்சத்துளை வைத்து அமுக்கி, காளிமுத்துவை, எனது அக்கா ராணி, சுமதி, சுமதி கணவர் மற்றும் வீரையா ஆகியோர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், காலை 03.15 மணிக்கு மருத்துவர் காளிமுத்துவை பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும் மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. 19.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு இது சம்மந்தமாக உச்சிப்புளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என போலிசார் விசராணையில்

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது மருமகன் என்பதால், அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .